


நகர் ஊரமைப்பு துறை(DTCP)
கோயம்புத்தூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
மலைப்பாளையம் ஊராட்சி

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியம் , மலைப்பாளையம் ஊராட்சி மற்றும் கிராமம், புல எண் . 21/2–ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.
(திட்டமில்லாபகுதி)

இணையதள விண்ணப்ப எண். K18XJASK/2025
அளவு 1 :400 (1 செ.மீ = 4மீ)

வ

குறிப்பு :

மனைப்பிரிவின் பரப்பு (As Per Patta)	: 0.85	ஏக்கர் (அ) 3450.00 ச.மீ	
மனைப்பிரிவின் பரப்பு (As Per Doc)	: 0.85	ஏக்கர் (அ) 3439.83 ச.மீ	
மனைப்பிரிவின் பரப்பு (As Per FMB)	: 0.8126	ஏக்கர் (அ) 3288.31 ச.மீ	
மனைப்பிரிவின் பரப்பு (As Per Field)	: 0.8124	ஏக்கர் (அ) 3287.85 ச.மீ	
ஒதுக்கிய மனைகள்	: 14		

மனைப்பிரிவின் எல்லை (As Per Field)
மனைப்பிரிவின் எல்லை (As Per FMB)
நிலையிலுள்ள சாலை / அணுகு சாலை

பொது ஒதுக்கீடுகள்
(உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை) :

I. மனைப்பிரிவு சாலை பரப்பு : 1108.65 ச.மீ

II. பூங்கா

i) ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு: (மனைப்பிரிவின் பரப்பு– மனைப்பிரிவின் சாலை பரப்பு) x10%
: (3450.00 – 1108.65) x 10% = 234.14 ச.மீ. (10.00%)

ii) TNCDBR–2019 விதி 47(6)–ன் படி பூங்கா (OSR 10%) பரப்பு 234.14 ச.மீக்கு ஈடான அரசு வழிகாட்டு மதிப்பீட ரூ.70,239/– நாள் 10.09.2025 அன்று மனுதாரரால் உரிய அரசு கணக்குத் தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது .

III. பொது உபயோகம் (மனைப்பிரிவின் மொத்தப்பரப்பில் சாலை பரப்பு நீங்கலாக1%)

A) LOCALBODY –க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (3450.00 – 1108.65) x 0.5% = 11.71 ச.மீ.(0.50%)
ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 15.68 ச.மீ (0.67%)

B) TANGEDCO –க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (3450.00 – 1108.65) x 0.5% = 11.71 ச.மீ.(0.50%)
ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 15.73 ச.மீ (0.67%)

மூலை முடக்கு :
12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ x 1.5மீ –ம் விடப்படல் வேண்டும் .
12.0மீ மேல் உள்ள சாலைகளுக்கு 4.5மீ x 4.5மீ –ம் விடப்படல் வேண்டும் .

கட்டிட வரம்பு
9.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ விடப்படல் வேண்டும்
9.0மீ –க்கு மேல் 18.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ விடப்படல் வேண்டும்

நிபந்தனைகள் :

1. அரசாணை எண் : 18 ந.நி (ம) கு.வ துறை நாள் : 04.02.2019–ன் படி சாலை (ம) பூங்கா (ம) பொது உபயோகம் உள்ளாட்சிக்கு தானமாகவும் , அரசாணை எண் : 16 ந.நி (ம) கு.வ துறை நாள் : 31.01.2020–ன் படி TANGEDCO–க்கான பரப்பு TANGEDCO (அ) உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டு உள்ளது .
2. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும் , எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜித பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் , தலைவர் மலைப்பாளையம் ஊராட்சி உறுதி செய்துகொள்ள வேண்டும் .
3. நில உரிமம் குறித்து வழங்கபட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் , சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும் .
4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வானையின் நகலோடு நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும் .
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவுவாயிலில் 60cm x 120cm நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும் .
6. உத்தேச மனைப்பிரிவில் அரசாணை எண் : 181ந.நி (ம) கு.வ துறை நாள் : 09.12.2020–ன் படி தார் சாலைகள் , மழைநீர் வடிகால் வசதி , குடிநீர் வசதிகள் (ம) தெருவிளக்குகள் ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும் .
7. அரசாணை எண் .141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் .16.07.2022–ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்
8. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைபிரிவு சாலைகளின் தரம் குறித்து உள்ளாட்சி பொறியாளரிடமிருந்து தகுதிச்சான்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் .

ம.வ./(கோ.மா.) எண்.268/2025(இணையதள வழி)

உதவி இயக்குநர் / இணை இயக்குநர் (பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் ,
கோயம்புத்தூர் மாவட்டம் .

Signature valid
Signed by: Joint Director
Location:Coimbatore
Date:2025.09.11 17:11:01

Signature valid
Signed by: Village Panchayat President
Location:Coimbatore
Date:2025.09.17 12:12:27